

திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூபாய் 5 கோடி மதிப்பில் நவீன முழு உடல் பரிசோதனை மையத்தினை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் துவக்கி வைத்தனர். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மை செயலாளர் மரு.செந்தில்குமார் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன், ஆணையாளர் மரு.மோனிகாராணா, துணை மேயர் ராஜ்,மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.ரேவதி பாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் நகராட்சி, அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பாக நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெ.யு.சந்திரகலா, நகரமன்ற தலைவர் தமிழ்ச்செல்வி அசோகன், தலைமை செயற்குழு உறுப்பினர் அ.அசோகன், மாவட்ட துணை செயலாளர் மு.சிவானந்தம், நகர செயலாளர் கோபி, ஒன்றிய செயலாளர்கள் பூர்ணசந்திரன், இ .செல்வம், நகர அவைத் தலைவர் ஷெரீப், நகரதுணை செயலாளர் தணிகை பெருமாள், செல்வி நகர சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் யமீன் ஷரீப் , நகர இளைஞரணி அமைப்பாளர் சரத் பாபு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திராவிட மாடல் ஆட்சியில்

# கேழ்வரகு உற்பத்தித் திறனில் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடம்!

## 17 இலட்சத்து 37 ஆயிரம் விவசாயிகள் பயனடையும் வகையில் பயிர்க்கடன்கள்!

சென்னை, ஆக.25-

முதலமைச்சர் .மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் கேழ்வரகு உற்பத்தித் திறனில் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடம் என்றும் கடந்த ஆண்டில் ரூபாய் 15 ஆயிரத்து 62 கோடி பயிர்க் கடன்கள் 17 இலட்சத்து 37 ஆயிரம் விவசாயிகள் பயன்! இந்த ஆண்டில் ரூபாய் 17 ஆயிரம் கோடி பயிர்க் கடன்கள் ரூ. 3000 கோடி கால்நடை வளர்ப்புக் கடன்கள் வழங்கப்படுகிறது என்றும் இணையம் வழி விண்ணப்பித்த ஒரே நாளில் பயிர்க்கடன்கள் கிடைக்கும் என்றும் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து அரசு வெளி யிட்டுள்ள செய்தி குறிப்பு வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இப்படி ஒரு திட்டம் இல்லை என்று சொல்லும் அளவுக்கு முன்மாதிரியான ஒரு திட்டத்தைத் தற்போது தொடங்கி வைத்துள்ளார்கள். வேளாண் பெருமக்கள் இணையவழியில் விண்ணப்பித்த அன்றே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக்கடன் சங்கங்கள் மூலம் பயிர்க்கடன் வழங்கும் திட்டம் தான் அது!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 17.8.2025 அன்று தருமபுரியில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் வேளாண்துறை சார்பில் அமைக்கப்பெற்றிருந்த சிறப்பான கண்காட்சி அரங்குகளையும் விவசாயக்கருவிகளையும் பார்வையிட்டு மகிழ்ந்தார்கள். அதிகாரிகளை யும், விவசாயிகளையும் பாராட்டினார்கள். அன்றைய விழாவில் இணையவழியில் விவசாயிகளுக்குப் பயிர்க்கடன் வழங்கும் சீரிய திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

பயிர்க்கடன்களைப் பெறுவதற்காகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களுக்கு இனி விவசாயிகள் நேரில் செல்லத் தேவையில்லை. இணையவழியில் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பித்த பின் கடன் தொகைக்காக இனி ஒரு வாரகாலம் விவசாயிகள் காத்திருக்கவும் தேவையில்லை. கடன் கோரி இணையத்தில் விண்ணப்பித்த அன்றைய தினமே அவர்களுக்குக் கடன் கிடைத்துவிடும். விவசாயி களுக்குப் பெரும்பயன் தரும் இத்திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தருமபுரி விழாவில் தொடங்கி வைத்துள்ளார்கள்.

**கடன்கோரி விண்ணப்பிப்பதில் எளிய நடைமுறை**

இத்திட்டத்தில் விவசாயி ஒருவர் விண்ணப்பிக்கும் முறையும் எளிமைப படுத்தப்பட்டுள்ளது. வேளாண் பெருமக்கள் அருகில் உள்ள இசேவைமையத்துக்குச் சென்று விண்ணப்பிக்க லாம். தங்களது கூட்டுறவுக் கடன் சங்க உறுப்பினர் எண் அல்லது மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சேமிப்புக் கணக்கு எண் இரண்டில் ஒன்றை மட்டும் கொடுத்தால் போதும். இந்த விண்ணப்பம் வருவாய்த் துறை, வேளாண்மைத் துறை ஆகிய இரு துறைகளிலும் சரிபார்க்கப்பட்டு அன்றைய தினமே கடன் தொகையானது வேளாண் பெருமக்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. இத்திட்ட த்தில் ஒரு விவசாயிக்கு அதிகபட்ச மாக 5 லட்சம் ரூபாய் வரை பயிர்க்கடன் வழங்கப்படு கிறது.

தர்மபுரியில் தொடங்கப்பட்டுள்ள இந்தத் திட்டமானது அனைத்து மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அன்றைய விழாவில் அறிவித்தார்கள். அதைவிட, பயிர்க்கடன் பெறுவதற்கு எளிமையான முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளதைப் போலவே, சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்கும் நடைமுறையும், சிறுகுறு கடன்களுக்கான நடை முறையும் எளிமைப்படுத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

**விண்ணப்பித்த ஒரே நாளில் விவசாயக் கடன்**

தமிழ்நாட்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக நெல், கரும்பு, பருத்தி, நிலக்கடலை, மக்காச் சோளம் ஆகியவற்றைப் பயிரிட பயிர்க் கடன்கள் வழங்கப்படுகின்றன. நாட்டில் கடன் வழங்கும் திட்டங்கள் ஏராளமாக உள்ளன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களில் அதிகபட்ச மாக மூன்று இலட்சம் ரூபாய் வரை கடன் பெற்று. அதனை ஓர் ஆண்டுக்குள் திருப்பிச் செலுத்தி விட்டால் வட்டி செலுத்தவேண்டிய அவசியம் இல்லை என்ற நடை முறையும் இருக்கிறது. ஆனால், உடனடியாகக் கடன் வழங்கும் திட்டம் என்பது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிடமாடல் ஆட்சியில் தான் தற்போது தொடங்கப்பட்டுள்ளது. அதுவும், ஒரே நாளில் கடன் வழங்கும் திட்டமாக இதனை முதலமைச்சர் அவர்கள் வடிவமைத்துள்ளார்கள்.

**வேளாண் பெருமக்கள் கவலையைப் போக்கியுள்ள திராவிட நாயகர்!**

இதுவரை பயிர்க்கடன்கள் பெறுவதற்கு பட்டா, சிட்டா, அடங்கல், கிராம நிர்வாக அலுவலர் சான்று, குடும்ப அட்டை ஆகிய வற்றை விண்ணப்பத்துடன் இணைத்து வழங்க வேண்டும். இதனை வாங்கி விண்ணப்பிப்ப தற்குத் தாமதம் ஆகிவிடுகிறது; கடன்பெற மேலும் தாமதம் ஆகி விடுகிறது என்று வேளாண் பெரு மக்கள் கவலையுடன் கூறி வந்தார்கள். வேளாண் பெரு மக்கள் கவலையைப் போக்கி இருக்கிறார்கள் திராவிட நாயகர் அவர்கள்.

**உயர்த்தப்பட்டுள்ள கடன்கள்:**

கடந்த ஆண்டில் 15 ஆயிரத்து 62 கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதனை 17.37 இலட்சம் விவசாயிகள் பெற்று பயன் அடைந்தார்கள். 4.43 இலட்சம் பேருக்கு 2 ஆயிரத்து 645 கோடி ரூபாய் கால்நடை வளர்ப்புப் பிரிவின் கீழ்கடன்கள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டு ரூ.17 ஆயிரம் கோடி வரை பயிர்க் கடன் வழங்கப்படும் என்றும்; 3 ஆயிரம் கோடி ரூபாய் கால்நடை பிரிவின் கீழ் கடன் வழங்கப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது.

**கேழ்வரகு உற்பத்தித் திறனில் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடம்**

திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு விவசாயச்சாகுபடி பாசனப்பரப்பும் அதிகரித்துள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் 457.08 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 20202021 ஆம் ஆண்டில் எக்டருக்கு 2,835 கிலோவாக இருந்த உணவு தானியப்பயிர்களின் உற்பத்தித்திறன் 202324 ஆம் ஆண்டில் 2,904 கிலோவாக அதிகரித்துள்ளது. கேழ்வரகு உற்பத்தித்திறனில் இந்தியாவில் தமிழ்நாடு முதலிடம். மக்காச்சோளம், மொத்த எண்ணெய் வித்துகள் மற்றும் கரும்பு உற்பத்தித்திறனில் இரண்டாம்இடம், குறுதானியங்கள் மற்றும் நிலக்கடலை உற்பத்தித்திறனில் மூன்றாம் இடம் என்ற அளவில் அகில இந்திய அளவில் உணவு தானிய உற்பத்தியில் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது.

இப்படி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பயிர்க்கடன்கள் வழங்கும் நடைமுறையில் புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்தி பயிர்க்கடன் தொகையையும் உயர்த்தி வழங்கி விவசாயப் பெருமக்களின் உள்ளங்களைக் குளிரச் செய்துள்ளார்கள். பல மாநிலங்களில் விவசாயிகள் போராடி வரும் சூழ்நிலையில் போராட வேண்டிய அவசியமே இல்லாத வாறு விவசாயிகளுக்குத் தேவை யான சலுகைகளை வழங்கி, அவர் களை மகிழ வைத்து விவசாய உற்பத்தி யைப் பெருக்குவதில் திராவிட மாடல் அரசுக்கு இணை இந்தியாவில் எங்கும் இல்லை.

இவ்வாறு தமிழ்நாடு அரசு .வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 'வாட்ஸ் அப்'பில் வரும் செய்தி!




### நிர்மலா ரவிச்சந்திரன் தலைமை!

# திண்டிவனத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திண்டிவனம், ஆக.25.

தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும் எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 15ஆம் தேதி சிதம்பரத்தில் தொடங்கி வைத்தார்.

இதையடுத்து விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் நகராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம் திண்டிவனம் தீர்த்த குளம் அருகில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் கலந்துகொண்டு முகாமினை தொடங்கி வைத்தார். முகாமில் 8.9.மற்றும் 12 வது வார்டுகளை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு இலவச வீட்டு மனை பட்டா, குடும்ப அட்டை, முதியோர் ஓய்வூதியம், கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் பயன்பாடுவதற்கும்,மின் இணைப்பு பெயர் மாற்றம்,சொத்து வரி உரிமம் பெற வேண்டி கோரிக்கை மனு அளித்தனர்.

இதை அடுத்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ திண்டிவனத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் அப்போது பொதுமக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் விவரம் குறித்து துறை சார்ந்த அதிகாரியிடம் கேட்டு அறிந்த முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம் எல்ஏ முகாமில் மனு கொடுத்தவர்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டுமெனஅதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

அப்போதுமுகாமில் பல ஆண்டுகளாக மின் இணைப்பு பெயர் மாற்றம்செய்ய முடியாமல் இருந்ததற்கு பெயர் மாற்றம் வேண்டி மனு அளித்தனர் இதேபோல் சொத்து வரி உரிமம் பெறுவதற்கும் முகாமில் மனு அளித்தனர். இந்த மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு மனு கொடுத்த பொது மக்களுக்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ உத்தரவினை வழங்கினார்.

உத்தரவை பெற்றுக் கொண்ட பொதுமக்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் நீண்ட நாட்கள் தீர்க்கப்படாத இருந்தகுறைகளை உடனடியாக தீர்வு காணப்படுவதகா பெரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

முகாமில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர்மாசிலாமணி, சேதுநாதன், திண்டிவனம் நகர செயலாளர்ஆசிரியர் கண்ணன்,பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன்,நகர மன்ற துணை தலைவர் ராஜலட்சுமி வெற்றிவேல்,நகர மன்ற உறுப்பினர்கள் ரவிச்சந்திரன்,சரவணன்,பாஸ்கர்மாவட்ட தொண்டரணி தலைவர் பிர்லா செல்வம்,சுகாதார பணிகள் அலுவலர் செந்தில்குமார்,மாவட்ட வர்த்தக அணி துணைத்தலைவர் ஆடிட்டர் பிரகாஷ், மாவட்ட பிரதிநிதி வி. எஸ்.முருகன், மருத்துவர் அணி சூரிய பிரகாஷ்,நகர துணைச் செயலாளர் கௌதமன் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம்,குறுக்குச்சாலை ஊராட்சியில் இந்து துவக்கப்பள்ளியில் குறுக்குச்சாலை, வள்ளிநாயகிபுரம், கே.சண்முகபுரம், வேடநத்தம் உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்ற உங்களுடன்_ஸ்டாலின் சிறப்பு முகாமை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்கண்டேயன் துவக்கி வைத்து இலவச வீட்டு மனை பட்டா மின்வாரிய துறை சார்பில் பெயர் மாற்றுதல் ஆணை மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வேளாண்மைத்துறை சார்பில் விதைகள் வழங்கினார்.நிகழ்வில் ஓட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் காசிவிஸ்வநாதன், எப்போதும் வென்றான் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சோலைசாமி, உள்ளிட்ட பொதுமக்கள்,துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம்குச்சனூர் பேரூராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம் நடைபெற்றது இந்த முகாமில் பேரூராட்சி தலைவர் ரவிச்சந்திரன்.துணைத் தலைவர் மணிகண்டன்.கவுன்சிலர்கள் முத்துராமலிங்கம் தயாளன்.மற்றும் அரசு அதிகாரிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.